**செய்தி வெளியீடு எண் : 1499** **நாள் : 30.08.2022**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (30.08.2022) சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை:**

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களே!

இந்த மாநாட்டிலே பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய தமிழக அமைச்சர் பெருமக்கள்

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களே!

திரு. தங்கம் தென்னரசு அவர்களே!

திரு. எஸ். இரகுபதி அவர்களே!

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களே!

திரு. மா. சுப்பிரமணியன் அவர்களே!

திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்களே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே!

திட்டக்குழுவின் துணைத் தலைவர் திரு. ஜெயரஞ்சன் அவர்களே!

சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை முதன்மைச் செயலாளர் திரு. உதயச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களே!

உயர்கல்வித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களே!

பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களே!

பதிவாளர்களே!

அரசு உயர் அலுவலர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

தமிழ்நாட்டின் அறிவுக் கருவூலங்களாக விளங்கக்கூடிய பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களான உங்கள் அனைவரையும் ஒரே நேரத்தில் சந்திப்பதில் உங்களோடு உரையாடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தின் அறிவின் அடையாளங்களாக திகழக்கூடியவர்கள் நீங்கள்!

உங்களது சிந்தனையை – ஆற்றலை தமிழ்நாட்டு இளைய சமுதாயத்துக்கு கொண்டு சேர்க்கும் மகத்தான பணியில் நீங்கள் உங்களை ஒப்படைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதற்காக உங்களை நான் மனமார வாழ்த்துகிறேன்.

தமிழ்நாட்டில் மொத்தம் 22 பல்கலைக்கழகங்கள் இருக்கிறது. இதில் விடுதலைக்கு முன் உருவாக்கப்பட்டவை இரண்டு பல்கலைக்கழகங்கள்தான்.

ஒன்று, சென்னைப் பல்கலைக் கழகம் 1857 - ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

இரண்டு, சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1929 - ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

1947 முதல் 1967 வரையிலான காலக்கட்டத்தில் ஒரே ஒரு பல்கலைக்கழகம்தான் உருவாக்கப்பட்டது. அதுதான், மதுரைப் பல்கலைக்கழகம்!

மற்றபடி, 19 பல்கலைக்கழகங்களும், 1967 - க்குப் பிறகு, அதாவது, திராவிட அரசுகள் அமைந்த, இந்த ஐம்பது ஆண்டு காலத்தில் உருவாக்கப்பட்டவை!

தமிழ்நாடு, உயர்கல்வியில் எந்தளவுக்கு வளர்ந்துள்ளது என்பதற்கு இதுவே மிகமிக முக்கிய சான்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

1857-இல் துவக்கி வைக்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம், மற்ற மாநிலங்களில் பல்கலைக்கழகங்கள் தொடங்க முன்மாதிரியாக இருந்ததுடன் இன்றுவரை பல்வேறு துறைகளில் இதுகோலோச்சியும் வருகிறது.

தமிழ்நாட்டில் இன்று 22 மாநிலப் பல்கலைக்கழகங்கள், கலை, அறிவியல், பொறியியல், கல்வியியல், விளையாட்டு, கால்நடை, மருத்துவம், மீன்வளம், தமிழ்வளர்ச்சி, சட்டம், வேளாண்மை மற்றும் இசை ஆகிய துறைகளின் கீழ் திறம்பட செயல்பட்டு வருகின்றன.

இப்படி தனித்தனி சிறப்புப் பல்கலைக்கழகங்கள் அதிகம் இருக்கும் மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு அமைந்திருக்கிறது. இந்தப் பல்கலைக் கழகங்களுக்காக ஆண்டுதோறும் 3 ஆயிரம் கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்கிறது. அத்தகைய சீரான நிதி ஒதுக்கீடுதான் அனைத்துப் பல்கலைக் கழகங்களும், இந்தளவுக்கு சிறப்பாகச் செயல்படக் காரணம்!

தமிழ்நாடு என்பது இந்தியாவிலேயே உயர்கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலமாக இருக்கிறது என்பதை நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள்.

இந்தியாவில் தலைசிறந்த 100 கல்வி நிறுவனங்களில் 18 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளது.

தலைசிறந்த 100 பல்கலைக்கழகங்களில், 21 தமிழ்நாட்டில் உள்ளது.

தலைசிறந்த 100 கல்லூரிகளில், 32 கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளது.

தலைசிறந்த 100 ஆராய்ச்சி நிறுவனங்களில், 10 தமிழ்நாட்டில் உள்ளது.

தலைசிறந்த 200 பொறியியல் கல்லூரிகளில், 35 கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளது.

தலைசிறந்த மேலாண்மை கல்வி நிறுவனங்களில், 11 தமிழ்நாட்டில் உள்ளது.

100 மருத்துவக் கல்வி நிறுவனங்களில், 8 தமிழ்நாட்டில் உள்ளது.

40 பல் மருத்துவக் கல்வி நிறுவனங்களில், 9 தமிழ்நாட்டில் உள்ளது.

30 சட்டக் கல்லூரிகளில், 2 தமிழ்நாட்டில் உள்ளது.

30 கட்டடக் கலைக் கல்லூரிகளில், 6 தமிழ்நாட்டில் உள்ளது.

இப்படி புள்ளிவிவரங்களை நான் சொல்லிக் கொண்டே போகலாம். கல்வியில் சிறந்த மாநிலமாக நாம் உயர்ந்து நிற்கிறோம்.

100 ஆண்டுகளுக்கு முன்னால், நீதிக்கட்சியினுடைய ஆட்சிக் காலத்தில் கல்விக்காக போட்ட விதைதான் இதற்கெல்லாம் காரணமாக அமைந்திருக்கிறது. ஒருவருக்குக் கல்வியை மட்டும் கொடுத்துவிட்டால், அது மிகப்பெரிய சொத்தாக அவருக்கு அமைந்துவிடும். அத்தகைய கல்விச் சொத்தை உருவாக்கும் இயக்கமாக, எப்போதும் திராவிட இயக்கம் இருந்துள்ளது.

அனைவருக்கும் கல்வி, அவர்கள் தகுதிக்கேற்ற வேலை கிடைக்க வேண்டும் என்பதுதான் திராவிடக் கொள்கை!

உயர்கல்வியால், ஒருவருக்குச் சமூகத்தில் நன்மதிப்பு கிடைக்கிறது. வேலை கிடைக்கிறது. வளமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் கிடைக்கிறது. சமூக வாழ்வில் புகழ் கிடைக்கிறது.

இவை அனைத்துக்கும் உயர்கல்வியே அடிப்படையாக அமைகிறது. அதனால்தான், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மிக அதிகமான உயர்கல்வி நிறுவனங்கள், அறிவியல் கல்லூரிகளாக, பொறியியல் கல்லூரிகளாக, மருத்துவக் கல்லூரிகளாக, சிறந்த கட்டமைப்பு வசதியுடன், தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளன என்பதில் எல்லோரும் பெருமைப்படுகிறோம்.

வெறும் வேலை வாய்ப்பு மட்டும் தருவதை, உயர்கல்வியின் நோக்கமாக நான் கருதுவதில்லை. அந்த எண்ணங்களை உங்களிடம் பரிமாறிக் கொள்வதற்காகத் தான் இந்த கருத்தரங்கம் அமைந்திருக்கிறது.

நாம் எப்போதும் உயர்ந்து நிற்கிறோம்! இதுபோதாது, இன்னும் உயர்ந்தாக வேண்டும்!

- தமிழ்நாட்டில் உயர்கல்வி பயின்ற பலர் இன்று பல்வேறு துறைகளில் சிறந்து நல்ல முறையில் உலகின் பல்வேறு நாடுகளில் பணிபுரிந்து வருகிறார்கள்.

- உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதம் என்பது அகில இந்திய அளவில் 27.1 தான். ஆனால் தமிழ்நாடு, 51.4 விழுக்காடு மாணாக்கர்கிள் சேர்க்கை விகிதத்துடன் உயர்ந்து நிற்கிறது.

- ஒரு முழுமையான மனிதனை, அனைத்துப் பண்புகளிலும் சிறந்துவிளங்கும் சாதனையாளர்களை உயர்கல்வி உருவாக்க வேண்டும் என்பதுதான் என் கனவு!

இந்தக் கனவை, தமிழ்நாட்டில் இயங்கும் கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் நிறைவேற்ற வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

- அனைத்திந்திய உயர்கல்வி ஆய்வறிக்கையின்படி, தமிழகப் பல்கலைக்கழகங்கள், சேர்க்கை வீதம், இடஒதுக்கீடு மற்றும் பேராசிரியர்கள் நியமனம் ஆகியவற்றில் தலைசிறந்து விளங்குகிறது.

- கட்டமைப்பு, ஆசிரியர் தரம் மற்றும் நியமனம், கற்பித்தல் மற்றும் கற்றல், ஆராய்ச்சி ஆகியவற்றில் தமிழக பல்கலைக்கழகங்கள் சிறப்பாக உள்ளன.

- இதன் வெளிப்பாடு தேசிய தர நிர்ணயக் குழுவின் மதிப்பீட்டில் தமிழகப் பல்கலைக்கழகங்கள் பெற்றுள்ள A++, A, B+ ஆகிய மூன்று தரச் சான்றுகள் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

- அகில இந்திய அளவில் தேசியத் தர வரிசைகட்டமைப்பில் (NIRF) முதல் ஆயிரம் இடங்களில் 164 இடங்களை அதாவது சுமார் 16 விழுக்காடு இடங்களை தமிழகத்தில் உள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்கள் அடைந்து சாதனை படைத்துள்ளன.

- எண்ணிக்கை, தரம் என்ற இரண்டிலும், தமிழக உயர்கல்வி நிறுவனங்கள் உயர்ந்த இடத்தில் இருப்பதைத் தேசியதர வரிசைக் பட்டியல் காட்டுகிறது.

- தேசிய தர வரிசையில், அனைத்து உயர்கல்வி நிறுவனங்களின் வரிசையில், 6 பல்கலைக்கழகங்களும், பல்கலைக்கழகங்கள் வரிசையில், 8 பல்கலைகக்கழகங்களும் இடம்பெற்று, நம் மாநிலத்தை உயர்கல்வியில் முதல் மாநிலமாக நிலைநிறுத்தியுள்ளன.

- வரும் ஆண்டுகளில் இந்நிலை மேலும் சிறப்பாக உயரும்!

மாணவர்களின் எண்ணிக்கைக் கூடும்போது, உயர்கல்வியின் தரம் குறைந்துவிடுகிறது என்ற வாதத்தை நாங்கள் ஏற்றுக் கொள்வதில்லை. நமக்குக் கல்வித் தரமும் வேண்டும்; மாணவர்களின் எண்ணிக்கையும் குறையக்கூடாது! இதில் நமது அரசு உறுதியாக இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, சென்னை மாநிலக் கல்லூரியில் சுமார் 5000 மாணவர்கள் பயில்கின்றனர். அதேநேரத்தில் தேசியத் தர வரிசையிலும், மூன்றாம் இடத்தை மாநிலக் கல்லூரி பெற்றுள்ளது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பாடத்திட்ட மறுசீரமைப்பில், நமது அரசு முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது.

வளர்ந்துவரும் தொழில்கள் மற்றும் அதற்குத் தேவையான திறன்களை வளர்க்கும் பொருட்டு, தொழில் நிறுவனங்களின் முழுபங்கேற்புடன் ஒருங்கிணைந்த பாடத்திட்டத்தினை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பட்டப்படிப்புகளை, உலகத்தரத்திற்கு இணையாகச் சீரமைத்து, மேம்படுத்தி பாடத்திட்டம், ஆராய்ச்சி மற்றும் புதுமையாக்கலில் பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அறிவுசார் துறைகளை, பன்னாட்டு உயர்கல்வி நிறுவனங்களுக்கு இணையாக சீரமைத்து தமிழகத்தை அறிவுசார் மாநிலமாக நிலைநிறுத்தும் நோக்கில்

- உயர்கல்வியில் 7.5% உள்ஒதுக்கீடு
- நான் முதல்வன் திட்டம்
- மூவலூர் இராமாமிர்தம்மாள் உயர்கல்வி உறுதித் திட்டம்

ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளின் வாயிலாக எல்லோரும் உயர்கல்வி பயில ஆவன செய்து வருகிறது. பாலின பாகுபாட்டினைக் களைவதையும், பெண்களின் உயர்கல்வியினை ஊக்குவிப்பதையும், நமது அரசு குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

அதனை செயல்படுத்த மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் பெயரில், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்புவரை பயின்று உயர்கல்வியில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் மாதம் 1000 ரூபாய் ஊக்கத்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் உயர்கல்வி, அனைவருக்கும் ஆராய்ச்சிக் கல்வி என்பதை இலக்காக வைத்துள்ளோம். உலகத்தரம் வாய்ந்த ஆராய்ச்சிகளை நமது மாநிலத்தில் செயல்படுத்தவும், ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணாக்கர்கள் மற்றும் இளநிலை மற்றும் முதுநிலை மாணாக்கர்களையும் ஆராய்ச்சி செய்ய ஊக்கப்படுத்தவும், ஆண்டுதோறும் ரூபாய் 50 கோடி அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதற்கான திட்ட அறிக்கைகள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் இருந்து பெறப்பட்டு நிபுணர் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு அவர்களின் பரிந்துரையின்படி நிதி வழங்கப்படும்.

நம்முடைய மாணவர்களின் ஆராய்ச்சி திறமையை மேம்படுத்தவும், புதிய கண்டுபிடிப்புகளை தமிழ்நாட்டில் ஊக்கப்படுத்தவும் "CM Research Fellowship" "முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத்தொகை" திட்டம் தொடங்கப்படும். இதற்கான மாநில அளவில் தகுதித் தேர்வு நடத்தப்பட்டு மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

தொழில்துறையில் ஏற்பட்டு வரும் நவீன மாற்றங்களுக்கு ஏற்ப ஆசிரியர்கள், மாணவர்களுக்கு உரிய திறன் சார்ந்த பயிற்சி வழங்க ஏதுவாக தொழில் நிறுவனங்களுடன் இணைந்து "ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி" (Faculty Development Programme) வழங்கப்படும்.

பல்கலைக்கழகங்களை வளர்த்தெடுக்கத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதற்கு தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது. ஏனென்றால், இது எங்களது முழுப் பொறுப்பு!

அதேநேரத்தில், மாநில அரசின் கொள்கை முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு பல்கலைக் கழகங்கள் செயல்பட வேண்டும்.

பல்கலைக் கழகங்களின் உண்மையான நோக்கம் என்பது அனைவருக்குமான அறிவுத்தளத்தை செம்மைப்படுத்துவது!

சமூகநீதியை அடித்தளமாகக் கொண்ட சமுதாயத்தில், பகுத்தறிவைக் கூர்மைப்படுத்துவதாக, நம்முடைய கல்வி நிலையங்கள் செயல்பட வேண்டும்.

அறிவியல் சிந்தனை கொண்ட சமூகத்தையும், அறிவுப்பூர்வமான மாணவர்களையும், உருவாக்கக் கூடிய கடமையைத்தான் பல்கலைக்கழகங்கள் செய்ய வேண்டும்!

நாட்டின் மற்ற மாநிலங்களைவிட நாம் முன்னேற்றம் அடைந்ததற்கும், தனித்துத் தெரிவதற்கும் இத்தகைய கொள்கை விழுமியங்கள்தான் காரணம்!

“ஒன்றிய - மாநில அரசு உறவுகள்” குறித்து ஆராய 2007 - இல் நியமிக்கப்பட்ட உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு. பூஞ்சி அவர்கள் தலைமையிலான ஆணையம் அளித்துள்ள பரிந்துரையின் அடிப்படையில் எனது தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு “துணை வேந்தர்களை மாநில அரசே நியமிக்கும்” மசோதைவை சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம்.

ஏனென்றால், இது மாநில அரசினுடைய உரிமை தொடர்புடைய பிரச்சினை; மாநிலத்தினுடைய பல்கலைக்கழகக் கல்வியுரிமை தொடர்பான பிரச்சினை; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் உரிமை!

ஆகவே, மாநில அரசின் கொள்கை முடிவுகளை பிரதிபலிக்கும் வகையில் பல்கலைக்கழகங்கள் செயல்பட வேண்டும், துணை வேந்தர்களாகிய நீங்கள் எல்லாம் செயல்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பட்டம் வாங்கும் இளைஞர்களை அல்ல, எவரோடும் போட்டியிடும் தகுதி படைத்த இளைஞர்களை தமிழ்நாட்டுக் கல்வி முறையானது உருவாக்கி இருக்கிறது. 'நீட்' தேர்வுக்கு எதிராக நாம் இருக்கிறோம். அந்தத் தேர்வுக்குப் பயந்து அதனை நாம் எதிர்க்கவில்லை.

அது உயர்த்தும் ஏணியாக இல்லாமல் தடைக்கல்லாக இருக்கிறது என்பதால் எதிர்க்கிறோம். படிப்புதான் தகுதியைத் தீர்மானிக்க வேண்டுமே தவிர தகுதியிருந்தால் தான் படிக்கவே வர வேண்டும் என்று சொல்வது,

இந்த நூற்றாண்டின் மாபெரும் அநீதி!

இதனால்தான் எதிர்க்கிறோம்!

கல்வி உரிமையைப் போராடிப் பெற்ற சமூகம் நாம் என்கிற காரணத்தால் எதிர்க்கிறோம்!

போராடி சுயமரியாதையை நிலைநிறுத்திய சமூகம், இந்தத் தமிழ்ச்சமூகம் என்பதால் எதிர்க்கிறோம்!

கல்வியால் முன்னேறுகின்ற சமூகம் நாம் என்பதால் எதிர்க்கிறோம்!

பின்னால் வரக்கூடிய தீமைகளை கடந்தகால வரலாறுகளின் அடிப்படையில் எடை போட்டு எதிர்க்கிறோம்!

எந்தப் படிப்பாக இருந்தாலும், அதனை நோக்கி மாணவர்களை ஈர்ப்பதற்காக, நம்முடைய அணுகுமுறைகளும் திட்டமிடுதலும் இருக்க வேண்டும்.

மாணவர்களை கல்வியிடம் இருந்து அந்நியப்படுத்தும் அத்தனையையும் நாம் எதிர்க்க வேண்டும்!

அந்த அடிப்படையில்தான் நீட் தேர்வை மட்டுமல்ல புதிய தேசியக் கல்விக் கொள்கையையும் நாம் எதிர்க்கிறோம்!

மாநிலக் கல்விக் கொள்கை வகுக்க ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளதே, அறிவியல் சார்ந்த சமூகமாக தமிழ்ச்சமூகத்தைக் கட்டமைக்க அதற்காகத்தான் அமைத்திருக்கிறோம்!

"To develop the scientific temper" என்பது ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் அரசியல்சட்டம் வழங்கியுள்ள அடிப்படைக் கடமை!

அந்தக் கடமை எனக்கும் உண்டு!

பல்கலைக்கழகத் துணை வேந்தர்களான உங்களுக்கும் உண்டு!

கல்வியாளர்களான உங்களுக்கும் உண்டு!

புதிய புதிய பாடங்களை அறிமுகம் செய்யுங்கள். புதிய புதிய பட்டப்படிப்புகளைக் கொண்டு வாருங்கள்.

மாணவர் சமுதாயத்துக்கு எந்தப் பாடத்தில் ஆர்வம் இருக்கிறதோ, அதனுள் அவர்களைப் பொருத்திக் கொள்ள அனுமதியுங்கள்.

புதிய பாதைகள் அமைப்பதாக பல்கலைக்கழகங்கள் அமைய வேண்டும். இந்த ஆட்சிக் காலத்தை, உயர்கல்வியின் பொற்காலமாகத் திகழ வைப்பது துணைவேந்தர்களாகிய உங்களின் கடமை!

சமத்துவமும் – பகுத்தறிவுச் சிந்தனையும் மிக்க சமூகத்தைக் கட்டமைப்பதே கல்வியாளர்களான உங்களுக்கு இருக்கக்கூடிய மாபெரும் கடமை, அது உங்களுக்கு வந்துசேரக்கூடிய மாபெரும் பெருமை!

பழமைவாத பிற்போக்குக் கருத்துகளைப் புறந்தள்ளி புதிய அறிவியல் கருத்துகளை ஆக்கப்பூர்வமான, வளமான சிந்தனையை மாணவர்களிடையே

வளர்த்து நாட்டுக்கும், எதிர்கால இளைஞர் சமுதாயத்துக்கும், பெருமை சேருங்கள்!

இதனை நீங்கள் உளமார நிறைவேற்றிக் காட்டுவீர்கள் என்ற நம்பிக்கையோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

- - - - - -

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in